1971 டிசம்பர் 17]

கோவை வேளாண்மைக் கல்லூரிப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஓய்வு கால நிதி

* 533 வினு—**திரு. என். மருதாசலம்** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை விவசாயக் கல்லூரியில் கிடங்கு வாட்ச்மேன், பண்ணைத் தொழிலாளர்கள் இவர்களுடைய வேலை நிரந்தரமாக்கப்பட்டபின் ஓய்வு பெறும் காலத்தில் "பென்ஷன்" தர வேண்டுமெனக்கோரி அரசுக்கு 26—6—1971-ல் பண்ணைத் தொழிலாளர் சங்கம் விண்ணப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) மேற்படி கோரிக்கை விரிவாக பரிசீலனைச் செய்யப்பட்டது. ஆனல் ஓய்வுகால நிதி விதிமுறைகளில் அவர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு வழியில்லை. எனவே அவர்களின் கோரிக்கை நிராகரிப்பட்டது.

திரு. என். மருதாசலம் : விவசாயக் கல்லூரியில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள்ஓய்வு பெற்ற காலங்களில் சும்மா போகவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக ஓய்வுச் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாடு வேளாண்மைத்துறையில் பல்வேறு பிரிவுகளில் பல்லாண்டுகளாக பணிபுரிந்து வரும் கிடங்கு காவலர், பயிற்சிபெற்ற, பயிற்சிபெறுத கூலியாட்கள் முதலானேர் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெற்று வருகின்றனர். அவர்களின் முழுநேர பணியாளர்களின் பணி நிரந்தாம் செய்யப்பட்டு, தமிழ்நாடு கடைநிலை ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதல் ஊதியக்குழு பரிந்துரைத்தது. மேற்படி பரிந்துரை இத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனல் அனைவரையும் ஒரேசமயத்தில் நிரந்தரமாகச் செய்யாமல் படிப்படியாக நிரந்தரம் செய்ய உத்தேசிக்கப்பட்டது. அதன்படி, முதற்படியாக அரசு ஆணை எண் 2204, வேளாண்மை, நாள் 15—7—68-ல் வேளாண்மைத்துறையில் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் குற்றேவலர்களில் 25 சதவிகிதத்தினர் அதாவது 164 ஊழியர்கள் மாநில அரசு ஊழியர்களாக்கப்பட்டனர்.

(திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் கையை உயர்த்திஞர்கள்)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இதில் இன்னுமா துணைக் கேள்விகள் இருக்கின்றன ?

திருமதி த. ந. அனந்தநாயகி : ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிறவர்களின் பணி தேவைப்படுகிறது என்றல் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசு ஒரு ஜீ.ஓ. பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைத்தான் சொன்னேன். ஜீ.ஓ. 2204 மூலம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அவர்கள் நிரந்தரமாக்கப்படுவது குறித்து விதிமுறைகள் இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.